

**PC ONLINE TEST BATCH ( DAY SHEET NO ) – 1**

**( 7 - ஆம் வகுப்பு வரலாறு )**

1. சார்மினார் எங்கு அமைந்துள்ளது - ஹைதராபாத்
2. திருவாலங்காடு செப்பேடு யாரை பற்றி குறிப்பிடுகிறது - முதலாம் ராஜேந்திர சோழன்
3. அன்பில் செப்பேடு யாரைப் பற்றி குறிப்பிடுகிறது - சுந்தர சோழன்
4. சோழ அரசர்களால் பிராமணர்களுக்கு வழங்கப்பட்ட நிலங்கள் எவ்வாறு அழைக்கப்பட்டது - பிரம்மதேயம்
5. சோழ அரசில் பிராமணர்கள் அல்லாதவர்களுக்கான நிலங்கள் எவ்வாறு அழைக்கப்பட்டது - வேளாண் வகை
6. சோழ அரசர்களால் கல்வி நிலையங்களை பராமரிப்பதற்காக வழங்கப்பட்ட நிலங்கள் எவ்வாறு அழைக்கப்பட்டது - சாலபோகம்
7. சோழ அரசர்களால் கோவில்களுக்கு கொடையாக வழங்கப்பட்ட நிலங்கள் எவ்வாறு அழைக்கப்பட்டது - தேவதானம்
8. சோழ அரசர்களால் சமண சமய நிறுவனங்களுக்கு கொடையாக வழங்கப்பட்ட நிலங்கள் எவ்வாறு அழைக்கப்பட்டது - பள்ளி சந்தம்
9. தான் வெளியிட்ட தங்க நாணயத்தில் பெண் தெய்வமான இலட்சுமியின் வடிவமும் தன் பெயரையும் பொறிக்க செய்தவர் யார் - முகமது கோரி
10. காயல் ( காயல் பட்டினம் ) எங்கு அமைந்துள்ளது - தூத்துக்குடி மாவட்டம்
11. ஜெய ஸ்தம்பா என்னும் வெற்றி தூணை ராணா அரசர் எங்கு நிறுவினார் – சித்தூர்

12. பால அரச வம்சத்தை உருவாக்கியவர் யார் – கோபாலர்

13. கிபி 1829 – லில் முக்கியமான 36 ராஜபுத்திர அரச குலங்களை பட்டியலிட்டவர் யார் - ஜேம்ஸ் டாட்

14. பால வம்சத்தின் மிகச்சிறந்த வலிமைமிக்க அரசர் யார் - முதலாம் மகிபாலர்

15. சௌகான்கள் என்ற அரச வம்சத்தை தோற்றுவித்தவர் யார் - சிம்ம ராஜ் ( இவர் அஜ்மீர் நகரை தோற்றுவித்தார் என அறியப்படுவார் ) மற்றும் ( சௌகான்களின் தலைநகரம் சாகம்பரி - ராஜஸ்தான் )

16. இரண்டாம் தரெய்ன் போரில் ( கிபி 1192 ) வெற்றி பெற்றவர் யார் - முகமது கோரி

17. 1905- யில் வந்த பிரிவினையின் போது ரக்ஷா பந்தன் விழாவை பெரும் அளவில் நடத்தியவர் யார் - ரவீந்திரநாத் தாகூர்

18. இந்தியாவில் முதல் இஸ்லாமிய அரசு எங்கு உறுதியாக நிறுவப்பட்டது – அஜ்மீர்

19. சோழ அரசியல் நிலவரி எவ்வாறு அழைக்கப்பட்டது – காணிக்கடன்

20. முத்து குளித்தலோடு தொடர்புடைய நகரம் எது – கொற்கை

21. காயலுக்கு இருமுறை வந்த வெளிநாட்டு பயணி யார் – மார்கோபோலோ

22. குத்புதீன் ஐபக் தனது தலைநகரை லாகூரில் இருந்து எங்கு மாற்றினார் – டெல்லி

23. குதுப்மினாருக்கான அடிக்கலை நாட்டியவர் யார் - குத்புதீன் ஐபக் ஆவார் ( குதுப்பினாரை கட்டி முடித்தவர் – இல்துமிஷ் ஆவார் )

24. முகமது பின் துக்ளக் தனது தலைநகரை எங்கிருந்து எங்கு மாற்றினார் - டெல்லியில் இருந்து தேவகிரிக்கு

25. லோடி அரச வம்சத்தை தோற்றுவித்தவர் யார் – பக்லூல் லோடி

26. சங்கம வம்சத்தின் தலைசிறந்த அரசர் யார் - இரண்டாம் தேவராயர்

27. ராக்சே தங்கடி என்று அறியப்படுவது எது - தலைக்கோட்டை போர் ( 1565 )

28. கைவினை கலைஞர்களுக்கும் வர்த்தகருக்கும் தனித்தனியே கில்டுகள் இருந்ததாக குறிப்பிட்டவர் யார் – அப்துல் ரசாக்

29. விஜயநகர பேரரசு அதிக அளவில் வெளியிட்ட தங்க நாணயத்தின் பெயர் என்ன - வராகன்

30. ஷா நாமா என்னும் நூலை எழுதியவர் யார் – பிர்தௌசி

31. தாமஸ்ரோ எங்கு ஜஹாங்கீர் அனுமதியுடன் முதல் வணிக மையத்தை நிறுவியினார்.- சூரத்

32. யாருடைய ஆட்சி காலத்தில் முகலாயர்களின் புகழ் உச்சத்தை எட்டியது – ஷாஜகான்

33. அக்பர் அவையில் இருந்த கதை ஆசிரியர் யார் –பீர்பால்

34. அக்பரின் அவையில் இருந்த திறமையான அதிகாரிகள் யாவர்-இராஜா தோடர்மால், ராஜா மான்சிங், ராஜா பகவான்தாஸ்

35. அக்பரின் அவையில் இருந்த பாடல் ஆசிரியர், இசை மேதை யார்– தான்சென்

36. அக்பரின் அவையில் இருந்த ஓவியர் யார் –தஷ்வந்த்

37. மன்சப்தாரி முறையை அறிமுகம் செய்தவர் யார் – அக்பர்

38. மராத்தியர்களின் போர் முறை எது -கொரில்லா தாக்குதல் முறை

39. முகலாய பேரரசர்களின் வாழ்விடம் என்றும் மற்றும் லால் குய்லா என்றும் அழைக்கப்படும் கோட்டை எது - டெல்லி செங்கோட்டை

40. மயில் சாசனம் யாருடைய காலத்தில் உருவாக்கப்பட்டது -ஷாஜகான் ( இவரின் இயற்பெயர் குர்ரம் )

41. சிவாஜியின் ஆசிரியர், குரு, பாதுகாவலர் யார் - தாதாஜி கொண்டதேவ்

42. சிவாஜியின் தொடக்க காலத்தில் இராணுவத்தின் முதுகெலும்பாக திகழ்ந்தது எது – காலாட்படை

43. கோட்டையை தாயாக கருதிய மராத்தியர்களின் ஆட்சி பொறுப்பேற்ற முதல் பேஸ்வா யார் - பாலாஜி விஸ்வநாத்

44. விஷ்ணு சித்தர் என்று அறியப்பட்டவர் யார் –பெரியாழ்வார்

45. திருப்பாவை மற்றும் நாச்சியார் திருமொழி ஆகிய நூல்களை இயற்றியவர் யார் – ஆண்டாள் ( இவர் ஆழ்வார்களில் உள்ள ஒரே ஒரு பெண் புலவர் ஆவார் )

46. நாயன்மார்களின் பாடல்கள் அனைத்தையும் தொகுத்தவர் யார் - நம்பி ஆண்டார் நம்பி

47. நம்மாழ்வாரின் 4000 பாடல்களை நாலாயிர திவ்ய பிரபந்தம் எனும் பெயரில் நூலாக தொகுத்தவர் யார் –நாதமுனி

48. தமிழகத்தில் சிவனை வழிபடும் சைவர்கள் ஆன அடியார்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர் – நாயன்மார்கள்

49. சீக்கியர்களின் புனித நூல் எது – குரு கிரந்சாகிப்

50. கும்பகோணத்திற்கு அருகிலுள்ள தராசுரம் ஐராவதீஸ்வரர் கோவில் யாரால் கட்டப்பட்டது - இரண்டாம் ராஜராஜ சோழன்

"உங்களின் வெற்றி எங்களின் அடையாளம்"

காப்பவர் கடவுள் என்றால்
காவலரும் கடவுள் தான்!!